

விழுப்புரம் மாவட்டம் கடற்கரை ஒட்டி உள்ள மரக்காணம் ஒன்றியம் மரக்காணம் உள்ளிட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசு சார்பில் செய்துள்ள முன்னேற்பாடுகளையும்,பேரிடர் மீட்பு உபகரணப் பொருட்களை வனத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி மஸ்தான், அன்னியூர் சிவா, மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி,மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயச்சந்திரன், மரக்காணம் ஒன்றியக் குழு பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



கோவையில் மழையால் பாதிக்கப்பட்ட கள்ளிமடை கதிரவன் கார்டன் சிவானந்தாகாலனி ஆகிய பகுதிகளை தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, கோவை மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன்,கோவை மாவட்ட தி.மு.க. செயலாளர்காள் நா.கார்த்திக் தொ..அ.ரவி தளபதி முருகேசன்,கணபதி ராஜ்குமார் எம்பி.,கோவை மாநகராட்சி மேயர் இரா.ரங்கநாயகி, துணை மேயர் வெற்றிசெல்வன் மாநகராட்சி கிழக்கு மண்டலத்தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், மாநகராட்சி சுகாதார குழு தலைவர் பெ.மாரிச்செல்வன், சிங்காநல்லூர் பகுதி2 செயலாளர் சிங்கை மு.சிவா எம்.சி. 61 வது வட்டக் கழகச் செயலாளர் தென்னவர் செல்வம்,மாமன்ற உறுப்பினர் ஆதி மகேஷ்வரி திராவிட மணி எம்.சி. கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை-

# மரக்காணம் பகுதிகளில் அமைச்சர் க.பொன்முடி நேரில் ஆய்வு!

மரக்காணம், அக். 17 -

வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதால் வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கி உள்ளது. இதனால் சென்னை உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது வடகிழக்கு பருவ மழையினால் தமிழ்நாடு அரசு பல்வேறு கட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டம் கடற்கரை ஒட்டியுள்ள மரக்காணம் பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாக்கும் வகையிலும் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதைத்தொடர்ந்து மரக்காணம் பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வது குறித்து வனத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி துறை சார்ந்த அலுவலர்களுடன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போதுமரக்காணம் பேரூராட்சி 5 வார்டு முதலியார் தெருவில் அமைக்கப்பட்டுள்ள வடிகால் வாய்க்கால் பணிகளையும் ,பூமிஸ்வரன் கோவில் அருகில் உள்ள குளத்தையும் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து அரசு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் க. பொன்முடி மருத்துவமனைகளுக்கு வருகை தந்த நோயாளிகளிடம் குறைகளை கேட்டறிந்தார் மேலும் மழைக்காலங்களில் பூச்சி கடிக்கு தேவையான மருந்து மாத்திரைகள் இருப்பு உள்ளதா எனவும் அவர் மருத்துவரிடம் கேட்டு அறிந்தார்

தொடர்ந்து வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் க. பொன்முடி கலந்து கொண்டு வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து பனிச்சமேடு குப்பத்தில் அமைக்கப்பட்டுள்ள புயல் பாதுகாப்பு மையத்தையும் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் வட கிழக்கு பருவ மழையினால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கும் பகுதிகளைகண்டறிந்தும், அப்பகுதியில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்குஏற்பாடு செய்யப்பட்டுள்ள முகாம்களையும் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும்கனமழையின் போது தாழ்வின பகுதிகளில் மழை நீர் தேங்கி நிற்காத வகையில் மழை நீரை வெளியேற்றுவதற்கான அனைத்து முன்னெடுப்பு பணிகளையும் மேற்கொள்ள அனைத்து துறை அலுவலர்கள் தயார் நிலையில் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் க.பொன்முடி :

மரக்காணம் பகுதியில் அதிக அளவு மழை சேதங்கள் ஏற்படாத வகையில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது மேலும் பொதுமக்கள் தங்கும் வகையில் 13 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே விழுப்புரம் மாவட்டத்தை பொருத்தமட்டில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மாவட்ட நிர்வா கத்தால் முறையாக செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக மரக்காணம் துரோபதி அம்மன் கோவில்அருகில் வசித்து வரும் நரிக்குறவர் இன மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர்.க. பொன்முடி வழங்கினார்.

ஆய்வின்போது முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி ,விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர்,தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் கௌதம சிகாமணி. மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயச்சந்திரன்,மாவட்டத் துணைச் செயலாளர் மரக்காணம் ரவிக்குமார், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி ,மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷு நிகம், வட்டாட்சியர் பழனி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், சிவநேசன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# நன்மங்கலம் - மடிப்பாக்கம் பகுதிகளில் ஆய்வு!

சென்னை, அக். 17 -

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமை யார் மலை ஒன்றியம் நன்மங்கலம் ஊராட்சியில் நேற்று முன்தினம் (15.10.2024) மாலை கீழ்க்கட்டளை கலங்கல் ஏரியிலிருந்து வெளியேறும் பல்வேறு பகுதிகளில் ச. அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வை யிட்டார். அதிகாரிகளிடம் அடைப்புகள் உள்ள இடங்களை கண்டறிந்து, கழிவை அகற்ற வேண்டுமென சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்தரமேஷ் எம்.எல்.ஏ அதிகாரிகளிடம் வலியுறு த்தினார்.

அதுபோது ஒன்றிய கழக செயலாளர் ஜி.வெங்கடேசன், ஒன்றிய குழு தலைவர் சங்கீதா பாரதிராஜன், நன்மங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் வி.கிரி, துணைத் தலைவர் கே.வி.கார்த்திகேயன், வார்டு உறுப்பினர்கள் ஏ.பி.ரமேஷ், என்.ஜி.,பிரபாகரன் ,பவானி தங்கமணி, இந்துமதி லோக நாதன், ஜெயசித்ரா திருமலை, பிரேமலதா வில்சன், ரேணுகா வசீகரன், உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பொதுநல சங்க நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் உடன் இருந்தனர்.

# திருச்சி தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



திருச்சி தெற்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் நாளை (18.10.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 06.00 மணிக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் என். கோவிந்தராஜன் தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் சேர்மன்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பொருள்** : 1. தொகுதி பார்வையாளர்கள் அறிமுகம்.
2. வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி.
3. OMR படிவம்.
4.கட்சி வளர்ச்சி நிதி தொடர்பாக.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
செயலாளர்,
திருச்சி தெற்கு மாவட்ட தி. மு.க.


4 -ம் ஆண்டு
நினைவேந்தல்

மாண்புமிகு
மா.சுப்பிரமணியன் B.A., L.L.B.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்

அவர்களின் இளைய மகன்
ச.அன்பழகன்
நாள் : 17–10–2024

தாய் தந்தையரின்
தியாக உணர்வை
பறைசாற்ற பிறந்தாயே...
எங்கள் அன்பகத்தின்
இதயங்களை ஏங்கவிட்டு
சென்றாயே... அன்பு!

நீங்கா நினைவுகளுடன்...
அம்மா : காஞ்சனா சுப்பிரமணியன்
அண்ணன் : மருத்துவர் சு.இளஞ்செழியன்
அண்ணி : மருத்துவர் கிரீத்தா செழியன்
உறவினர்கள் மற்றும் நண்பர்கள்




நெஞ்சில் நிழலாடும் அன்பின் நினைவில்....
மடிப்பாக்கம் சே.சிந்தன்
துணைச் செயலாளர் – சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி தி.மு.க.